பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**06 01 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. ஊட்டச்சத்து குறைபாட்டை அகற்றுவதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் தொடக்கக் கல்வி முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை தாய்மொழியில் இருக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

3. இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 11 இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதுச்சேரி முதலமைச்சர் மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இந்தியா — Luxembourg இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து அந்நாட்டு பிரதமருடன், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று ஆலோசனை நடத்தினார்.

5. விஜய் ஹஸாரே கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், தமிழகம் 54 ரன் வித்தியாசத்தில், திரிபுரா அணியை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

ஊட்டச்சத்து குறைபாட்டை அகற்றுவதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஊட்டச்சத்து பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய அவர், ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, அரசுடன் தனியார் நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், சத்திஷ்கட் மாநிலம், பிலாய் எஃகு தொழிற்சாலையின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ், அரசு பள்ளிகளில் பயிலும் 4 ஆயிரம் மாணவர்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவு வழங்கும் திட்டத்தை அமைச்சர் காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.

மேலும், மஹாராஷ்ட்ர மாநிலம், நாக்பூரில் அங்கன்வாடி மையங்களைச் சேர்ந்த 3 ஆயிரம் குழந்தைகள் பயன்பெறும் வகையிலான ஊட்டச்சத்து திட்டத்தையும் திரு. பியூஷ் கோயல் தொடங்கி வைத்தார்.

<<<<<<>>>>>>

நாட்டில் தொடக்கக் கல்வி முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை தாய்மொழியில் இருக்க வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மருத்துவ மற்றும் பொறியியல் கல்வியை தாய்மொழியில் பயிற்றுவிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக கூறினார்.

நாட்டின் அனைத்து பிராந்திய மொழிகளும் தேசிய மொழிகள் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த ஆண்டு மராட்டி, தெலுங்கு, பெங்காலி உள்ளிட்ட மேலும் ஐந்து மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கியதை திரு. தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டார்.

முன்னதாக, தமிழ், தெலுகு, மலையாளம் உள்ளிட்ட ஐந்து மொழிகளை சார்ந்த 55 இலக்கிய தொகுப்புகளை அமைச்சர் வெளியிட்டார்.

<<<<<<>>>>>>

இந்தியா — **Luxembourg** இடையே நிதி சேவைகள், முதலீடு, தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேற்கொள்வது குறித்து அந்நாட்டு பிரதமர் **Luc Frieden**-னுடன்

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று ஆலோசனை நடத்தினார்.

இந்திய — ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு **Luxembourg** அளித்துவரும் ஆதரவுக்கு தமது நன்றியை அந்நாட்டு பிரதமரிடம் தெரிவித்ததாக டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

<<<<<<>>>>>>

கல்வி, சுகாதாரம், வேளாண், கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் முக்கிய இடம்பெற்றுள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஜெய்பூரில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான மாநாட்டில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், இந்தியாவில் அடுத்த மாதம் உலக செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு நடைபெறவுள்ளதாக கூறினார்.

பிரிட்டன், தென்கொரியா, பிரான்ஸ் நாடுகளில் நடைபெற்ற இந்த செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு தற்போது முதல் முறையாக இந்தியாவில் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் முன்னோடியாக மேகாலயா, ஒடிஷா மாநிலங்களுக்கு பின்னர் ராஜஸ்தானில் மண்டல செயற்கை நுண்ணறிவு மாநாடு நடைபெற்றதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<>>>>>>

இலங்கை கடற்படையினரால் இம்மாதம் ஒன்றாம் தேதி சிறைபிடிக்கப்பட்ட 11 இந்திய மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதுச்சேரி முதலமைச்சர் திரு என். ரங்கசாமி, மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடித்தில், காரைக்காலை சேர்ந்த 10 மீனவர்களும், தமிழகத்தை சேர்ந்த ஒரு மீனவரும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்ததாக கூறியுள்ளார்.

கோடியக்கரையிலிருந்து மீன்பிடிக்க சென்ற இவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு ரங்கசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் பரம்வீர் சாகர் யாத்ரா என்ற பெயரிலான தேசிய மாணவர் படையின் படகு பயணத்தை

அந்தமான் நிக்கோபார் முப்படை ஒருங்கிணைந்த கமாண்ட் தளபதியான வைஸ் அட்மிரல் அஜய் கோச்சர், ஸ்ரீ விஜயபுரத்தில் இருந்து இன்று தொடங்கிவைத்தார்.

இந்த கப்பல் பயணத்தை தமிழகம், புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கான என் சி சி இயக்குனரகம் கடற்படை கப்பல் மூலமாக ஏற்பாடு செய்துள்ளது.

நாட்டின் பரம்வீர் சக்ரா விருது பெற்றவர்களின் பெயரிடப்பட்ட அந்தமானை சேர்ந்த 21 தீவுகளுக்கு இந்த பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

<<<<<<>>>>>>

**இனி, மத்திய அரசு கடந்த ஆண்டு படைத்த சாதனைகள் குறித்த தொகுப்பு.**

**(Opening Tune - 20 Sec.)**

**இதில் இன்று இடம்பெறுகிறது, எளிதாக வர்த்தகம் புரிவதற்கான சீர்திருத்த நடவடிக்கைகள் …**

***(Sound Byte - 120 Sec.)***

<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேசத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் முடிவடைந்த நிலையில், தேர்தல் ஆணையம் இன்று வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

லக்னோவில் செய்தியாளர்களிடம் பேசிய தலைமை தேர்தல் அதிகாரி திரு நவதீப் ரின்வா, இந்த வரைவு வாக்காளர் பட்டியலில் 12 கோடியே 55 லட்சம் வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியலில் இருந்து 2 கோடியே 89 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இறுதி வாக்காளர் பட்டியல் வரும் மார்ச் மாதம் 6-ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் திரு நவதீப் ரின்வா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தெற்கு மற்றும் கிழக்கு லெபனானில் இஸ்ரேல் விமானப்படையினர் தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நாட்டின் தெற்கு கடற்கரைப்பகுதியில் அமைந்துள்ள Sidon நகரில் மூன்றடுக்கு வர்த்தக வளாகத்தின் மீது விமானப்படை தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலை லெபனான் அதிபர் திரு **Joseph Aoun** வன்மையாக கண்டித்துள்ளார்.

இந்த தாக்குதலை நியாயப்படுத்தியுள்ள இஸ்ரேலிய ராணுவம் ஹெஸ்புல்லா மற்றும் ஹமாஸ் தீவிரவாதிகள் ஆயுதங்களை பதுக்கிவைத்திருந்த இடங்களில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், தொலைத்தொடர்பு மற்றும் அஞ்சல்துறை ஓய்வூதியதாரர் சங்க பிரதிநிதிகளுடன் புதுதில்லியில் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அப்போது உறுதியளித்தார்.

பாரதிய தொலைத்தொடர்பு ஓய்வூதியதாரர் சங்கம், பாரதிய அஞ்சல் ஓய்வூதியதாரர் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு ஓய்வூதியதாரர் சங்கங்கள் இதில் கலந்துகொண்டன.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

விஜய் ஹஸாரே கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், தமிழகம் **54** ரன் வித்தியாசத்தில், திரிபுரா அணியை வென்றது.

அகமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த தமிழக அணி, **50** ஓவரில், **6** விக்கெட் இழப்பிற்கு, **259** ரன் எடுத்தது.

**260** ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய திரிபுரா அணி, **42** புள்ளி நான்கு ஓவரில், அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து **205** ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

------------

மலேசியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-12, 21-17** என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Zii Jia Lee** -ஐ வென்றார்.

**<<<<<<END>>>>>>**